IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.410/2023

DEPOSITION OF WITNESS P.W.4

| | | |
|---|---|---|
| NAME | : | PONMALAR |
| HUSBAND NAME | : | ANNADURAI |
| VILLAGE | : | SERUVANGI |
| OCCUPATION | : | HOUSE WIFE |
| AGE | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of October 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது ஊரை சேர்ந்தவர். கடந்த 29.04.2022 மாலை 07.00 மணியளவில் நான் நடைபயிற்சி செல்லும்போது காஞ்சனா என்பவர் வீட்டின் வெளியே நேதாஜி, ராஜ்குமார், பாபு ஆகியோர் அசிங்கமாக பேசி கூச்சல் போட்டுகொண்டிருந்தனர். காஞ்சனா வீட்டில் பிள்ளைகள் படித்துகொண்டிருப்பதாகவும் ஏன் இப்படி அசிங்கமா பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு பாபு, ராஜ்குமார் (எ) ஆப்பில் ஆகியோர் இரும்பு ராடால் இடுப்பிலும், கட்டையால் கழுத்திலும் அடித்தனர். அவரது 2வது மகன் பிரபு சம்பவம் சம்பந்தமாக கேட்டபோது நேதாஜி மற்றும் பாபு ஆகியோர் இரும்பு ராடாலும, கட்டைாலும் அவரையும் அடித்தனர். பின்னர் வீட்டில் இருந்த சோபாவை அடித்து சேதப்படுத்தினர். பின்னர் காயம்பட்டவரை ஆட்டோவில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை சாட்சி சொல்ல நீதிமன்றத்திற்கு நானாகதான் வந்தேன். புகார்தாரரும், மற்ற சாட்சிகளும் நீதிமன்றத்தின் வெளியேதான் உள்ளனர் என்றால் சரிதான். புகார்தாரரும் மற்ற சாட்சிகளும் கேட்டுகொண்டதறன்பேரில் சாட்சி அளிக்கிறனே் என்றால் சரியல்ல. போலிசார் என்னை சம்பவம் நடந்த 3 நாட்கள் கழித்து விசாரணை செய்தார்கள். நான் நடைபயிற்சி செய்ய எந்த பக்கமாக சென்றேன் என்றால் செருவங்கி தெருவிலேயே நடைபயிற்சி செய்தேன். போலிசார் என்னை விசாரணை செய்து எழுதினார்களா என்றால் எழுதவில்லை. மேற்படி விசாரணை செய்து என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் கையொப்பம் பெறவில்லை. போலிசார் என்னை எந்த இடத்தில் விசாரணை செய்தார்கள் என்றால் செருவங்கி தெருவில் வைத்து விசாரணை செய்தார்கள். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், புகார்தாரர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய்சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. காஞ்சனா எனது உறவினர் இல்லை.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.